விழுப்புரம் நகராட்சி ஆணையரின் செயல்முறைகள்

முன்னிலை:– திரு.H.இரமேஷ், பி.எல்.,

நா.க.எண்.7718/2023/F1 நாள்.08/04/2024

பொருள் : மனைப்பிரிவு – விழுப்புரம் நகராட்சி – பாணாம்பட்டு கிராமம், சர்வே எண்.382/1A2, 382/1A1, 382/2A2, 382/3A, 384/1B, 384/1C, 384/2, 384/3, 384/4, 384/5A, 384/5B, 384/6A, 388/1–ல் 2.345 ஏக்கர் அல்லது 9,489 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடிதம் நா.க.எண்.9893/2022/TCP, நாள்.31.05.2023
2. நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரம் எண்.2904/2023, நாள்.23.05.2023
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.02.01.2024
4. நகராட்சி பொறியாளர், விழுப்புரம் அவர்களின் குறிப்பு நாள்:2.11.2023 மற்றும் 04.01.2024
5. 1.திரு.N.D.அய்யப்பன், 2.திரு.L.வெங்கடேசன், 3.M.சசிதரன், 4.திரு.G.அரிராமன், 5.திரு.D.செல்வகுமார், எண்.239, மேட்டு தெரு, சாலாமேடு, விழுப்புரம் என்பவரின் மனு நாள்.07.06.2023 மற்றும் 02.04.2024
6. இந்நகர் மன்ற தீர்மான எண்.486, நாள்13.03.2024

*****

உத்திரவு:–

பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடிதத்தில் விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாணாம்பட்டு கிராமம், சர்வே எண்.382/1A2, 382/1A1, 382/2A2, 382/3A, 384/1B, 384/1C, 384/2, 384/3, 384/4, 384/5A, 384/5B, 384/6A, 388/1–ல் 2.345 ஏக்கர் அல்லது 9,489 ச மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(வி.மா) எண்.78/2023 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் மனுதாரரின் தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரத்தில் மனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண்.2904/2023, நாள்.23.05.2023–ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டது. சிறப்பு நிபந்தனை எண்.3–ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை நகராட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் நில உரிமை மாற்றம் செய்து உட்பிரிவு செய்தும் பட்டா எண்.14373என்ற எண்ணிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளுக்கான மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை குழாய் வசதிக்கான கட்டணங்கள் இவ்வலுவலக அறிவிப்பில் கட்டணங்கள் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனுதாரர் மனைப்பிரிவிற்கு வளர்ச்சிகட்டணம் ரூ.7,00,000 நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு (இரசீது எண்.0000222 நாள்.05.04.2024) இணைத்துள்ளார். மேலும் மனதாரர் மனைப்பிரவு அனுமதிக் கட்டணமாக ரூ.1,18,000 நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு (இரசீது எண்.0000219 & 0000220 நாள்.05.04.2024) மற்றும் மனைப்பிரிவு வைப்புத்தொகை ரூ.3,00,000 நகராட்சி கருக செலுத்தப்பட்டு இரசீது எண்.0000221 நாள்.05.04.2024 இணைத்துள்ளார்.

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்ட இறுதி ஒப்புதல் வழங்கவும் மற்றும் மேற்படி மனை பிரிவுவரைபடத்தில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுளள சாலைகள் 2,754,77 ச.மீ, பொது ஒதுக்கீடு 62.99 ச.மீ, மற்றும் திறவிடம் 92.95 ச.மீ, நிலங்களை ஏற்கவும் பார்வை 6-ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான 486, நாள்13.03.2024-ல் அனுமதி அளித்துள்ளது.

விழுப்புரம் எல்லைக்குட்பட்ட பாணாம்பட்டு கிராமம், சர்வே எண்.382/1A2, 382/1A1, 382/2A2, 382/3A, 384/1B, 384/1C, 384/2, 384/3, 384/4, 384/5A, 384/5B, 384/6A, 388/1-ல் 2.345 ஏக்கர் அல்லது 9,489 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு (ம.வ/ந.ஊ.உ.இ(வி.மா) எண்.78/2023) பார்வை 1-ல் காணும் கடிதத்தில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
விழுப்புரம் நகராட்சி.

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம்-1.

பெறுநர்:

1.திரு.N.D.அய்யப்பன்,
2.திரு.L.வெங்கடேசன்,
3.திரு.M.சசிதரன்,
4.திரு.G.அரிராமன்,
5.திரு.D.செல்வகுமார்,
எண்.239, மேட்டு தெரு,
சாலாமேடு, விழுப்புரம்

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம்.
2. சார்பதிவாளர் இணை -II, சார்பதிவாளர் அலுவலகம், விழுப்புரம்.
3. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விழுப்புரம்.